நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.216 / 2021**

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ஆனந்தன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தியாகராஜன் | : | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | சிறுபுலியூர் | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 62 /2023 |

(எதிரிகள் ஆஜர் )

**நாள் : 18.07.2023**

**முதல் விசாரணை:**

1) நான் சிறுபுலியூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுததான். முதலாவது கையெழுத்து யாருடையது என்று தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் மேற்படி கையெழுத்தை செய்தேன். பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.2/அ.சா.4** ஆகும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 23.08.2018 ஆம் தேதி நானும், ரவி என்பவரும் சம்பவ இடத்தில் நின்று பேசி கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது மருவூர் காவல்நிலையத்தை சேர்ந்தவர்கள் சம்பவ இடத்தை பற்றிய ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் எங்கள் முன்பாக தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், ரவி என்பவரும்

கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

மறு விசாரணை இல்லை

(ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு **)**